IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI

SC.No.178/2022 Date: 05.02.2025.

அ.சா.3-லோகநாதன்

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் வீட்டின் கதவு எண்ணை நான் போலீஸ் விசாரணையின் போது சொல்லவில்லை. என் நிலம் அ.சா.2ன் நிலத்திற்கு வடக்கிலுள்ளது. என் வீட்டின் கதவு எண்.6/1ஏ. சத்தம் கேட்டு நான் சென்ற போது கைகலப்பு நடந்து கொண்டிருந்தது. சம்பவம் ரத்தினவேலு வீட்டிற்கு வடபுறம் நடந்தது. அந்த வீட்டில் ரத்தினவேலு 15 வருடங்களாக குடியிருக்கிறார். அந்த வீடு யாருக்கு சொந்தமானது என்றால் மொத்தம் 3 பேருக்கு பாத்தியப்பட்டது. ரத்தினவேலுவும் எதிரிகளும் எனக்கு பங்காளிகள். மேற்படி சொத்து மூன்று பேருக்கு பாத்தியம் என்று அவர்கள் சொன்னதை வைத்து சொல்கிறேன். ரத்தினவேலு சொன்னாரா என்றால் அவர் சொல்வதற்கு முன்பே எனக்கு தெரியும். இது சம்பந்தமாக நான் பஞ்சாயத்து பேசியதில்லை. ரத்தினவேலுவிற்கும், எதிரிகளுக்கும் இடையே பாகதகறார் ஆனது எனக்கு தெரியும். நானும், அ.சா.2ம் இரத்த வெள்ளத்தில் கிடந்த ரத்தினவேலுவை தூக்கி உட்கார வைத்தோம் என்றால் சரிதான். ரத்தினவேலு அணிந்திருந்த வேட்டி, சட்டை, தரையிலும் இரத்தமாகியிருந்தது. நாங்கள் தூக்கும் போது என் உடையிலும் இரத்தம் ஆனது. நாங்கள் இருவரும் 108 க்கு தகவல் சொல்லவில்லை. கடந்த 7 ஆண்டுகளாக நான் மற்றோர் உதவியில்லாமல் கை தடியில்லாமல் நடமாட முடியாது என்றால் நான் கைத்தடி வாங்கி 3 மாதங்கள் தான் ஆகிறது. ரத்தினவேலுவை அவரது மகன் காரில் அழைத்து சென்ற போது நான் அவர்களுக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் சேர்ந்த பின்பு சுமார் 1 மணி நேரத்தில் போலீசார் அங்கு வந்தார்கள். மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அதன் பிறகும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சொன்ன

நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 40 செண்ட் நிலம் எதிரிகளுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. ரத்தினவேல் பணபலம், ஆள்பலம் உள்ளவர் என்பதால் எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்துவிட்டு அவர்களிடம் பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்றாலும், நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ரத்தினவேலு அந்த வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/-லோகநாதன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.